S.P. Krishnamoorthy D.R.E.,

98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE வெள்ளி நவம்பர் 21 * 2025 * மலர் -1 * இதழ்-173* VOL-1 * ISSUE-173 விலை ரூ.3 * பக்கம் -4

## 5 மாவட்ட கல்லூரிகளில் புதிய கட்டடம் திறப்பு:

# அரசுப் பொறியியல் கல்லூரிகளுக்கு 190 உதவிப் பேராசிரியர்கள் நியமனம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பணி ஆணைகளை வழங்கினார்!!

சென்னை, நவ. 21

அண்ணா பல்கலைகழகத்திற்கு உட்பட்ட அரசு பொறியியல் கல்லூரிகளுக்கு 190 உதவிப் பேராசிரியர்கள் நியமிக்கப்ப ட்டு ள்ளார்கள். இதற்கான பணி ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் வழங்கினார். உயர்கல்வித் துறையின் உள்கட்டமைப்புகளை மேம்படுத்திடும் வகையில் கடலூர் மாவட்டம், வடலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 13 கோடியே 71 லட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள், விழுப்புரம் மாவட்டம், செஞ்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 13 கோடியே 92 லட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம். திருப்பத்தூர் மாவட்டம், நாட்றாம்பள்ளி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 14 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம், அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 15 கோடியே 60 லட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம், மயிலாடுதுறை மாவட்டம், மணல்மேடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 கூடுதல் வகுப்பறைகள்



மற்றும் கழிவறைத் தொகுதிக் கட்டடம்; என மொத்தம் 59 கோடியே 93 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள, உயர்கல்வித் துறை சார்ந்த கட்டடங்களை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

பாலிடெக்னிக் கல்லூரிகள்:

தமிழ்நாட்டில் உள்ள 44 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளைத் உலகத் தரமான தொழிற்துறை 4.0 தரங்களுக்கு ஏற்பதிறன்மிகுமையங்களாக 2,590.303 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்துவதற்குடாடாடெக்னாலஜிஸ் லிமிடெட் நிறுவனத்திற்கும், தமிழ்நாடு அரசின் தொழில்நுட்ப கல்வி ஆணையரகத்திற்கும் இடையே முதலமைச்சர் முன்னிலையில் இன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தி டப்பட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தமானது, தொழிற்துறையுடன் இணைந்து கல்வி நிறுவனங்களின் உள்க ட்டமைப்புகளை நவீனமயமாக்குதல், புதிய தொழிற்சார் பாடத்திட்டங்களை உருவாக்குதல், ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்துதல், மாணவர்களுக்கான வேலைவாய்ப்புகளை அதிகரித்தல் ஆகியவற்றைநோக்கமாககொண்டுள்ளது.

உதவிப்பேராசிரியர்கள்:

அண்ணா பல்கலைக்கழகஉறுப்பு கல்லூரிகளில்190உதவிப்பேராசிரியர்கள், 12 உதவி நூலகர்கள்மற்றும்11 உதவி இயக்குநர்(உடற்கல்வி) பணியிடங்க ளுக்கு ஆசிரியர்தேர்வு வாரியம்மூலமாக தேர்வு நடத்தப்பட்டு, பின்னர் அண்ணா பல்கலைக்கழகத்தால் நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டு, இப்பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு முதலமைச்சர் இன்று பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உயர்கல்வி த் துறை செயலாளர் பொ. சங்கர், கல்லூரி கல்வி ஆணையர் எ.சுந்தரவல்லி, தொழில்நுட்பக் கல்வி ஆணையர் ஜெ. இன்னசென்ட் திவ்யா, அண்ணா பல்கலைக்கழகத்தின் பதிவாளர் வெ. குமரேசன், டாடா டெக்னாலஜிஸ் லிமிடெட் நிறுவனத்தின் செயல் துணைத் தலைவர் சைலேஷ் சரப், உலகளாவிய தலைவர் (அரசாங்க திட்டங்கள் மற்றும் திறன்கள்) சுஷில் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பைக் மீது கார் மோதியதில் 3 வாலிபர்கள் சாவு!

## மேம்பாலத்தில் சென்றபோது பரிதாபம்!!

ராணிப்பேட்டை, நவ.21

ராணிப்பேட்டையில் பைக் மீது கார் மோதியதில் 3 வாலிபர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

புதிதாக கட்டப்பட்ட மேம்பா லத்தில் இன்று அதிகாலை நடந்த இந்த விபத்து பற்றிய விவரம் வருமாறு:–

ராணிப்பேட்டை அருகே காரை பகுதியில் புதிதாக ஒரு மேம்பா லம் கட்டப்பட்டுள்ளது. இந்த மேம்பாலத்தின் மீது இன்று அதி காலை 3 மணி அளவில் மோட் டார்சைக்கிளில்(பைக்கில்) 3 பேர் சென்று கொண்டிருந்தனர். அப் போது கர்நாடகத்தில் இருந்து அதிவேகமாக வந்த ஒரு சொகுசு கார் இவர்கள் சென்ற மோட்டார் சைக்கிள் மீது அதிபயங்கரமாக மோதியது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த 3 பேரும் தூக்கி வீசப்பட்டனர். அதில் 2 பேர் சம் பவ இடத்திலேயே பரிதாபமாக



உயிரிழந்தனர்.

இதற்கிடையே உயிருக்கு போராடி கொண்டிருந்த மேலும் ஒரு நபரை அப்பகுதியினர் அடுக் கம்பாறை அரசு மருத்துவம னைக்கு அனுப்பி வைத்தனர்.

உயிருக்கு ஆபத்தானநிலையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப் பட்டது. ஆனால் சிகிச்சை பல னின்றி அவரும் பரிதாபமாக உயி ரிழந்தார்.இதனால் இந்த விபத்தில் சாவு எண்ணிக்கை 3 ஆனது.

இதுகுறித்து ராணிப்பேட்டை போலீசாருக்கு தகவல் தெரிவிக் கப்பட்டது. இதையறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீ சார் வழக்குப்பதிவு செய்து விசா ரணை நடத்தினார்கள். மேலும் புதிய மேம்பாலத்தில் உயிரிழந்த இளைஞர்களின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வாலாஜாபேட்டைஅரசுமாவட்ட தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

பின்னர் போலீசார் நடத்திய விசாரணையில் மேம்பால விபத் தில் உயிரிழந்தவர்கள் காரை பகு தியை சேர்ந்த தினேஷ் (20), வேலூர் மாவட்டம் ரங்காபுரம் பகுதியை சேர்ந்த சாஜன் (26) மற் றும் ஆற்காடு பகுதியை சேர்ந்த பாலமுருகன் (19) என தெரியவந் தது. மேலும் விபத்துக்குள்ளான கார் மற்றும் மோட்டார் சைக்கிள் பறிமுதல் செய்யப்பட்டு தீவிர விசாரணை நடைபெற்று வருகி றது.

விபத்தில் 3 வாலிபர்கள் உயிரி ழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பையும் சோகத் தையும் ஏற்படுத்தியுள்ளது.



சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மணிமுத்தாற்றின் குறுக்கே வடமாவளி அணைக்கட்டு பணிக்கு அமைச்சர் பெரியகருப்பன் அடிக்கல் நாட்டினார். இதில் வைகை வடிநில வட்டம் கண்காணிப்பு பொறியாளர் அண்ணாதுரை, செயற்பொறியாளர் மணிமுத்தாறு வடிநில கோட்டம் சௌந்தரம், மற்றும் செயற்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.

## திருச்சி சிறையில் ரகளையில் ஈடுபட்ட

# வெளிநாட்டு கைதிகள் 11 பேர் புழல் சிறைக்கு மாற்றம்!

சென்னை, நவ.21

தமிழகத்தில் சட்டவிரோதமாக குடியேறியோர், விசா காலம் முடிந்தும் தமிழகத்தில் வசிப்போர், போலி கட வுச்சீட்டு மூலம் தமிழகத்துக்கு வந்தவர்கள், போதைப் பொருள் கடத்தல் மற்றும் விற்பனை என பல்வேறு குற் றங்களில் ஈடுபட்ட 100–க்கும் மேற்பட்ட வெளிநாட் டுக் கைதிகள் திருச்சி மத்திய சிறை வளாக சிறப்பு முகா மில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்த முகாமில் அடைக்கப்பட்டுள்ள நைஜீரியா நாட்டைச் சேர்ந்த பிரான்சிஸ், பீட்டர், யூசுப், ஜேம்ஸ் ஆகிய 4 கைதிகள் சம்பவத்தன்று இரவு ரகளை யில் ஈடுபட்டு முகாமின் கதவை சேதப்படுத்தினர்.

இதுதொடர்பாக திருச்சி கொட்டப்பட்டில் உள்ள இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாமின் துணை ஆட் சியர் சாந்தானலட்சுமி, கே.கே.நகர் காவல் நிலையத்தில் அளித்த புகாரின்பேரில் 4 பேர் மீதும் வழக்குப் பதியப் பட்டது. இதைத் தொடர்ந்து மேற்கண்ட 4 பேருடன் சேர்ந்து நைஜீரியா நாட்டைச் சேர்ந்த ஜான், காலின் ஆண்டே, எப்பிங் எத்தின், காட்வின் சக்குவா, ஒசாலி யாலோ சிலாகி ஜான், கானா நாட்டைச் சேர்ந்த ஜான், சூடானைச் சேர்ந்த காதர் அபுதாஹிர் ஆகிய 11 பேரும் சிறப்பு முகாமில் இருந்து தங்களை விடுவிக்கக் கோரி மீண்டும் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு ரகளையில் ஈடு பட்டு முகாமின் கதவை சேதப்படுத்தினர். 11 பேருக் கும் திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவம னையில் உடல் பரிசோதனை செய்யப்பட்டு சென்னை புழல் சிறைக்கு மாற்றப்பட்டனர்.



திண்டுக்கல் மாவட்டம், குஜிலியம்பாறை தாலுகாவில் புதிதாக அமையப்பெற்ற மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்ற திறப்பு விழா திண்டுக்கல் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்றது. இதில் திண்டுக்கல் முதன்மை மாவட்ட நீதிபதி முத்துசாரதா, கலெக்டர் சரவணன், போலீஸ் எஸ்.பி. பிரதீப் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



உடுமலை பஞ்சலிங்க அருவியில் குளிக்க மாவட்ட நிர்வாகம் அனுமதி வழங்கியதையடுத்து சுற்றுலா பயணிகள் குளித்து மகிழ்ந்தனர்.

## கேரளாவில்

# 11 வயது மகளை கற்பழித்த தந்தைக்கு 178 ஆண்டு ஜெயில்!

## மற்றொரு வழக்கில் 8 வயது சிறுமியை சீரழித்து கொன்றவனுக்கு தூக்குத் தண்டனை!!

கோழிக்கோடு, நவ.21–

கேரளாவில் 11 வயது மகளை கற்ப ழித்து தந்தைக்கு 178 ஆண்டு ஜெ யில் தண்டனை விதிக்க ப்பட்டது. மற்றொரு வழக்கில் 8 வயது சிறுமியை கடத்தி சீர ழித்து கொன்ற வாலிபருக்கு தூக்குத் தண் டனை வழங்கப்பட்டது.

கேரள மாநிலம் கோழிக்கோடு பகுதி யில் உள்ள மஞ்சேரி பகுதியைச் சேர்ந்த 40 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் தனது 11 வயது மகளைகற்பழித்தார். பள்ளியில் சிறுமிகளுக்கு பொது அறிவு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அதில் ஒரு ஆண் பெண் குழந்தைகளை தொட்டு பேசுவதில் உள்ள வித்தியாசங்கள் (குட் டச்.. பேட் டச்..)குறித்து அவர்களிடம் கேள்விகள் கேட்கப்பட்டன.

அப்போது ஒரு 11 வயது சிறுமி எழுந்து ஆசிரியரிடம் தனது தந்தை தன்னிடம் நடந்து கொண்டது குறித்து கூறினாள். அப்போது அவள் கூறியதை வைத்து அந்த சிறுமியை அவளது தந்தை 3 முறை கற்பழித்தது தெரியவந்தது. மேலும் இச் சம்பவங்கள் குறித்து யாரிடமாவது கூறி னால் அவளை கொலை செய்து விடுவ தாக மிரட்டி உள்ளார்.

இது குறித்து பள்ளி ஆசிரியர்கள் போலீ சிடம் புகார் கொடுத்தனர். அதைத் தொடர்ந்து போக்சோ சட்டத்தில் அவரை போலீசார் கைது செய்தனர். அவர் மீது போக்சோ நீதிமன்றத்தில் நீதிபதி ஏ.எம். அஷ்ரப் முன்னிலையில் வழக்கு விசா ரணை நடைபெற்றது. அதில் மகளை கற் பழித்த தந்தைக்கு 178 ஆண்டுகள் சிறைத் தண்டனைவிதித்துநீதிபதிதீர்ப்பளித்தார். மேலும் ரூ.10.7 லட்சம் அபாரதம் விதித் தும் உத்தரவிட்டார்.

இதற்கிடையே இந்த வழக்கில் 178 ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்ற நபர் ஏற்கனவே 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்று தாவனூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். ஏனெனில் கடந்த 2022–ஆம் ஆண்டு ஒரு மாற்றுத்தி றனாளி பெண்ணை கற்பழித்த வழக்கில் இவருக்கு இந்த தண்டனை வழங்கப்பட் டது குறிப்பிடத்தக்கது.

மற்றொரு வழக்கில் 8 வயது சிறுமியை கடத்தி கற்பழித்த வாலிபருக்கு மரணத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. உத்த ரப்பிரதேச மாநிலம் வாரணாசியில் 8 வயது சிறுமி கடை வீதிக்கு சென்றிருந் தார். அப்போது அங்கு சென்ற இர்ஷாத் (வயது 23) என்ற வாலிபர் அந்த சிறுமியை கடத்திச் சென்று கற்பழித்து படுகொலை செய்தார். பின்னர் அந்த சிறுமியின் உடலை சாக்கு பையில் அடைத்து அப்ப குதியில் உள்ள பள்ளிக் கட்டிடத்தின் பின் புறம் வீசி சென்றார். இச்சம்பவம் கடந்த 2024–ஆம் ஆண்டு நடந்தது. இந்த வழக் கில் கைது செய்யப்பட்ட இர்ஷாத் மீது வாரணாசி போக்சோ நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி அவருக்கு தூக்குத் தண் டனை விதித்து தீர்ப்பளித்தார்.



விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டத்திற்குட்பட்ட வீடூர் அணையிலிருந்து விவசாய பாசனத்திற்காக மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், தலைமையில், ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தரணி வேந்தன் செஞ்சி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் ஆகியோர் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது. உடன் நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் திரு.அய்யப்பன், நீர்வளத்துறை உதவி பொறியாளர்கள் மோகன்ராம், சதீஷ் கண்ணன், இளநிலைப் பொறியாளர் பாபு உட்பட பலர் உள்ளனர்.



# 2026ல் கூட்டணி ஆட்சி அமைய வாய்ப்பு ; தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா பேச்சு!

வத்தலக்குண்டு,நவ.21

வத்தலகுண்டுவில் தேசிய முற்போக்கு திராவிட கழகம் சார்பில் நடைபெற்ற உள்ளம் தேடி, இல்லம் நாடி பிரச்சார பொதுக் கூட்டத்தில் தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் 2026 சட்டமன்றத் தேர்தலில் கூட்டணி ஆட்சி அமைய வாய்ப்பு உள்ளதாக பேசினார்.

திண்டுக்கல் கிழக்கு மாவட்டம் நிலக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வத்தலகுண்டுவில் உள்ளம் தேடி, இல்லம் நாடி நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்திற்கு திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தேமுதிக செயலாளர் முத்துக்காளை தலைமை வகித்தார்.நிலக்கோட்டை சட்டப்பேரவை பொறுப்பாளர் மாசாணம் முன்னிலை வகித்தார்.கூட்டத்தில் வத்தலகுண்டு மேற்கு ஒன்றிய தேமுதிக செயலாளர் கருத்தபாண்டி, நிலக்கோட்டை தெற்கு ஒன்றிய செயலாளர் வெள்ளைச்சாமி, வத்தலகுண்டு கிழக்கு ஒன்றிய செயலாளர் மணிமுருகன், நிலக்கோட்டை வடக்கு ஒன்றிய செயலாளர் பழனி ஆகியோர் வரவேற்று பேசினர்.கூட்டத்தில் தேமுதிக பொதுச்செயலாளர், பிரேமலதா விஜயகாந்த் பேசியதாவது.

நடைபெறும் 2026 சட்டப்பேரவை தேர்தலில் கூட்டணி ஆட்சி அமைய வாய்ப்புகள் உள்ளது.ஆளும் கட்சிக்கும் ஆண்ட கட்சிக்கும் சவாலாக தேமுதிக உள்ளது. டிசம்பர் 28ஆம் தேதி நடைபெறும் தேமுதிக நிறுவன தலைவர் விஜயகாந்த், இரண்டாம் ஆண்டு குருபூஜை விழாவில் நீங்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும். ஜனவரி 9ஆம் தேதி கடலூரில் நடைபெறும் மாநில மாநாட்டில் முக்கிய அறிவிப்புகள் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். 2026ல் நீங்கள் விரும்பும் மகத்தான கூட்டணி அமையும்.தேர்தல் வாக்குறுதியாக, சபரிமலை மற்றும் கொடைக்கானல் செல்லும் சாலையில் வத்தலகுண்டு உள்ளதால் இங்கு 24 மணி நேரம் இயங்கும் நவீன அரசு மருத்துவமனை அமைக்கப்படும். வத்தலகுண்டு பேரூராட்சி நகராட்சியாக தர உயர்த்தப்படும்.பூ விளைச்சல் அதிகம் உள்ள நிலக்கோட்டையில் சென்டு தொழிற்சாலை அமைக்கப்படும். வத்தலகுண்டுவில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும்.தேர்தல் பிரச்சாரத்தில் விஜயகாந்தின் வாரிசுகள் விஜய பிரபாகரன், சண்முக பாண்டியன் ஆகியோர் ஈடுபடுவார்கள். இவ்வாறு பிரமலதா விஜயகாந்த் பேசினார்.கூட்டத்தில், 17 ஆண்டுகள்குழந்தைஇல்லாமல்இருந்து, விஜயகாந்த் ஆலயத்தில் வேண்டுதல் வைத்து குழந்தை பெற்றுக்கொண்ட, குழந்தைக்கு விஜயகாந்த் தந்தையின் பெயரான அழகர்தியாஸ் என பெயர் வைத்தார்.அதேபோல் மற்றொரு குழந்தைக்கு விஜயராஜ் என பெயர் வைத்தார். இக்கூட்டத்தில் வத்தலகுண்டு பேரூர் செயலாளர் காஜாமைதீன் மற்றும் தேமுதிக மாவட்ட,ஒன்றிய,நகர நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வேலூர் மாவட்ட

# காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பொதுமக்கள் குறை தீர் நாள் முகாம்!



வேலூர்,நவ.21

வேலூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆ.மயில்வாகனன் உத்தரவின் பேரில், பொதுமக்கள் குறைதீர்வு நாள் ஒவ்வொரு வாரமும் புதன்கிழமையன்று நடத்தப்பட்டு வருகிறது. இந்த சிறப்பு மனு நாளில் பொதுமக்கள் தங்கள் குறைகளை மனுக்களாக மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம், நேரில் அளித்து குறைகளை கூறி வருகின்றனர்.

அது மட்டுமின்றி வாரத்திலுள்ள அனைத்து வேலை நாட்களிலும், பொதுமக்களின் மனுக்களை நேரில் பெற்று உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, பொதுமக்களின் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு வருகின்றது. காவல் கண்காணிப்பாளரின் தலைமையில் நடைபெற்ற, சிறப்பு பொதுமக்கள் குறை தீர்வு மனு நாளில், 36 மனுக்கள் பெறப்பட்டது.

இந்த மனுக்கள் மீது உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொண்டார். இவ்வாறு வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக பத்திரிகை செய்திக்குறிப்பில் குறிப்பி டப்பட்டுள்ளது.



காஞ்சிபுரம் மாவட்டம் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்தின் சார்பில் காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் நரப்பாக்கம் ஊராட்சியில் தமிழ் நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்து அமைக்கப்பட்டுள்ள புகைப்பட கண்காட்சியினை பொது மக்கள் பார்வையிட்டனர்.

# வீட்டில் அழுகிய நிலையில் விசைத்தறியாளர் உடல் மீட்பு!

ஈரோடு, நவ.21

ஈரோடு மாவட்டம் பெருந்துறை அடுத்த துடுப்பதி, சுள்ளி பாளையம் பகுதியைச் சேர்ந்தவர் பழனிசாமி (57). விசைத்தறி ஓட்டி வந்தார். இவரது மனைவி கடந்த 5 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். இவருக்கு ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர். மகன் கோயம்புத்தூரில் திருமணமாகி தனியாக வசித்து வருகிறார். பழனிச்சாமி மட்டும் தனியாக வசித்து வந்தார். பழனிசாமி அவ்வபோது கோவையில் உள்ள மகன் வீட்டுக்கு சென்று வருவது வழக்கம். கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு பழனிச்சாமி கோவையில் உள்ள மகன் வீட்டுக்கு சென்று வந்தார். அதன் பிறகு மகனிடம் பேசவில்லை. இந்நிலையில் பழனிச்சாமி வீட்டுக்கு அவரது அத்தை மகன் சென்றுள்ளார். வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசி உள்ளது. இதனால் சந்தேகம் அடைந்த அவர் வீட்டுக்குள் சென்று பார்த்த போது சமையலறை வெளியே படிக்கட்டில் பழனிசாமி உடல் அழுகிய நிலையில் இருந்தது.

இதுகுறித்து பெருந்துறை போலீசில் தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் அவரது உடலை மீட்டு பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இது குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சத்தியமங்கலத்தில்

# நா.த,க.வினர் முற்றுகை போராட்டம்!

சத்தியமங்கலம், நவ.21

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் மொத்தம் 10 வனச்சரகங்கள் உள்ளன. இதில் கடம்பூர் மலைப்பகுதி, தாளவாடி மலைப்பகுதி, ஆசனூர் வனப்பகுதியில் வாழும் மலை வாழ் மக்களுக்கு வனத்துறையினர் கடும் கட்டுப்பாடுகளையும், அபராதத்தையும் விதித்து வருகின்றனர். மலைவாழ் மக்களின் முக்கிய வாழ்வாதாரமான ஆடு, மாடு மேய்த்தல், வனப்பகுதியில் இருந்து தேன் எடுத்து விற்றுதல், சுள்ளி விரகுகளை சேமித்து விற்பனை செய்வது ஆகியவை முக்கியமான வாழ்வாதாரமாக இருந்து வருகிறது. இந்நிலையில் வனத்துறையினர் ஆடு மாடு மேய்த்தால் ஆயிரம் ரூபாயும், சுள்ளி பொறுக்கினால் 2000 ரூபாயும் என அபராதம் விதித்து மலைவாழ் மக்களுக்கு தொடர்ந்து இடையூறு செய்து வருவதால் இதனைக் கண்டித்து சத்தியமங்கலத்தில் நாம் தமிழர் கட்சியின் சார்பாக மலைவாழ் மக்களை ஒன்றிணைத்து சத்தியமங்கலம் பேருந்து நிலையத்திலிருந்து கோபி ரோட்டில் அமைந்துள்ள மாவட்ட வன அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

# ஏடிஎம் வாகனத்தை கடத்தி ரூ.7.11 கோடி கொள்ளை!

பெங்களூரு நவ.21

பெங்களூரு சவுத் எண்ட் சர்க்கிள் பகுதியில் உள்ள ஏடிஎம் மையத்திற்கு பணம் நிரப்ப HDFC வங்கி கிளையில் இருந்து ஒரு வேன் பணத்தை ஏற்றிச் சென்று கொண்டிருந்தது. அப்போது ஒரு டொயோட்டா இன்னோவா கார் இவர்களை திடீரென வழி மறித்து நிறுத்தியது. இன்னோவாவில் இருந்த 7 பேர் வங்கி ஊழியர்களை அணுகி, தாங்கள் ரிசர்வ் வங்கியை சேர்ந்தவர்கள் எனக்கூறி ஆவணங்களைச் சரிபார்க்க வேண்டும் என்றும் கூறியுள்ளனர். அப்போது அந்த கும்பல் பணத்தை தங்களது காருக்கு வலுக்கட்டாயமாக மாற்றியுள்ளனர். பின்னர் ஊழியர்களை வேறு ஒரு இடத்தில இறக்கிவிட்டு பணத்துடன் அங்கிருந்து தப்பி சென்றுள்ளனர். இதனையடுத்து, காவல்துறையினர் சிறப்பு குழுக்களை அமைத்து குற்றவாளிகளை தீவிரமாக தேடி வருகின்றனர்.

# முதியவர் தூக்கிட்டு தற்கொலை!

சிவகாசி, நவ.21

சிவகாசி அருகே விஸ்வநத்தம் காமராஜபுரம் காலனியை சேர்ந்தவர் முத்துகாமாட்சி (65). பட்டாசு ஆலை தொழிலாளி. இவருக்கு கனக ஜோதி (58) என்ற மனைவி யும், 2 மகள்களும் உள்ளனர். கடந்த சில வாரங்களுக்கு முன்பு முத்து காமாட்சியின் தாயார் உடல்நலம் சரியில் லாமல் இறந்து விட்டார். இதனால் மனவேதனை அடைந்த முத்து காமாட்சி அதிக அளவில் மது அருந்தியதாக கூறப்படுகிறது. கடந்த 13ஆம் தேதி கனக ஜோதி, தனது மகளை பார்ப்பதற்காக மதுரைக் குச் சென்றுள்ளார். அப்போது வீட்டில் தனியாக இருந்த முத்து காமாட்சி தூக்கிட்டு தற் கொலை செய்து கொண் டார். வீட்டிலிருந்து துர்நாற்றம் வந்ததால் அரு கில் இருந்தவர்கள் சிவகாசி கிழக்கு போலீசாருக்கு தக வல் தெரிவித்தனர். அதனை தொடர்ந்து போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து உடலைக் கைப்பற்றி பிரேத பரி சோதனைக்காக விருது நகர் கிழக்கு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் குறித்து சிவகாசி நடத்தி வருகின்றனர்

## OPPO இந்தியாவில்

# Find X9 Seriesஐ அறிமுகப்படுத்தி பிரீமியம் மொபைல் தரத்தை மறுஅளவீடு செய்கிறது!




கோயம்புத்தூர் , நவ.21

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட Find X9 Series மொபைல்களை OPPO இந்தியா இன்று அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம், இந்தியாவின் பிரீமியம் ஸ்மார்ட்போன் சந்தையில் தங்கள் பயணத்தை மேலும் உறுதிப்படுத்தி யுள்ளது. Find X பாரம்பரியத்தைத் தொடர்ந்து வரும் இந்த புதிய சீரிஸில், Find X9 மற்றும் Find X9 Pro ஆகிய இரண்டு மாடல்கள் உள்ளன. ஒரு ஃப்ளாக்ஷிப் மொபைலால் என்னென்ன கொடுக்க முடியும் என்பதற்கு இவை ஒரு புதிய இலக்கணத்தை வகுக்கின்றன. இந்தப் புதிய சீரிஸ், Hasselblad நிறுவனத்துடன் இணைந்து உருவாக்கப்பட்ட அடுத்த தலைமுறை கேமரா சிஸ்டம், ஆச்சரியப்படும்படியான பேட்டரி லைஃப், மிக சக்திவாய்ந்த பெர்ஃபார்மன்ஸ், மற்றும் மிகவும் ஸ்மூத்தான, ஸ்மார்ட்டான ColorOS 16 ஆகியவற்றுடன் ஒரு மிகச் சிறந்த ஆல்ரவுண்டர் அனுபவத்தை வழங்குகிறது.விலை விவரங்களைப் பொறுத்தவரை, Find X9 Pro மொபைல் 16GB + 512GB வேரியண்ட் INR 109999 விலையில் கிடைக்கும். அதேசமயம், Find X9 மொபைல், 12GB + 256GB வேரியண்ட் INR 74999 விலையிலும், 16GB + 512GB வேரியண்ட் INR 84999 விலையிலும் கிடைக்கும். இந்த இரண்டு மாடல்களின் விற்பனையும் நவம்பர் 21 முதல் தொடங்குகிறது. Find X9 Pro மொபைலை நீங்கள் OPPO estore, Amazon, Flipkart மற்றும் முக்கிய ரீடெயில் அவுட்லெட்ஸில் வாங்கிக் கொள்ளலாம்.



விழுப்புரம் கரும்பு திருமண மண்டபத்தில் கூட்டுறவுத்துறை சார்பில் 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) .ஜெ.இ.பத்மஜா, தலைமையில், ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தரணி வேந்தன் முன்னிலையில், திருக்கோவிலூர் சட்டமன்ற உறுப்பினர் முனைவர் க.பொன்முடி , செஞ்சி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் , விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன் , உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜெ.மணிக்கண்ணன் , ஆகியோர் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் ம.ஜெயச்சந்திரன் உட்பட பலர் உள்ளனர்.



இராணிப்பேட்டை மாவட்ட தேர்தல் அலுவலரும் கலெக்டருமான சந்திரகலா கலவை வட்டாட்சியர் அலுவலகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியாக பூர்த்தி செய்யப்பட்டு பொது மக்களிடமிருந்த பெறப்பட்ட விண்ணப்பங்களை தேர்தல் ஆணைய செயலியில் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டு வருவதை பார்வையிட்டார் உடன் வட்டாட்சியர் சரவணன் துணை வட்டாட்சியர்கள் உட்பட மற்றும் பலர் இருந்தனர்.

## ஸ்ரீபெரும்புதூரில்

# சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா சார்பில் விவசாய கடன் சேவை வழங்குதல் திட்டம் !

### முதன்மை மேலாளர் திலீப் குமார் தொடங்கி வைத்தார்!!



ஸ்ரீபெரும்புதூர்நவ.21

ஸ்ரீபெரும்புதூரில் உள்ள பட்டுநூல்சத்திரம் பகுதிக்கு உட்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் உள்ள முதல் மாடியில் சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா சார்பாக விவசாய கடன் சேவை வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது திட்டத்தில் சுமார் பத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு ரூபாய் 30 லட்சம் மதிப்பீட்டில் கோழி வளர்ப்பு,ஆடு வளர்ப்பு , மகளிர் சுய உதவி குழுக்கள் , டிராக்டர் , உணவு பதப்படுத்தல் குடோன் , அரிசி பதப்படுத்துதல் குடோன் உள்ளிட்ட

விவசாய கடன்ங்களுக்கு சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியாவின் முதன்மை மேலாளர் திலீப் குமார் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் பவானி ஆகியோர் விவசாயிகளுக்கு கடன்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா ஸ்ரீபெரும்புதூர் கிளை மேலாளர் சுஜிதா , துணை மேலாளர்கள் மதுமிதா , சங்கர்நாராயணன் , விளம்பர மேலாளர் திருவள்ளூர் சீனிவாசன் பேங்க் ஊழியர்கள் விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மேலும் ரூபாய் 2 கோடிக்கு அதிகமான கடன்களை வழங்க உள்ளதாக சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா கிளை மேலாளர் சுஜிதா தெரிவித்தார் .

# திடக்கழிவு மேலாண்மை சுத்திகரிப்பு ஆலை குறித்து புரளிகளை நம்பாதீர்கள்!



வத்தலக்குண்டு நவ.21

பட்டரிவீரன்பட்டரி அருகேயுள்ள அய்யம்பாளையம் தமா்சாஸ்தா கோவரில் ரோட்டரில் ரூ.25 கோடரி மதரிப்பீட்டரில் சேவுகம்படடரி், பட்டரிவீரன்பட்டரி, அய்யம்பா ளையம் பேரூராட்சரிகளுக்கு தரிடக்கழரிவு மேலாண்மை சுத்தரிகாரிப்பு ஆலை அமைப்பதற்கு இடம் தோ்வு செய்யப்பட்டுள்ளதாகவம், இதனால் இப்பகுதரியரில் காற்று, குடரிநீா் மற்றும் வவரிசாயம் பாதரிக்கப்படும் சூழல் ஏற்படும் என்பதால் இந்த தரிட்டத்தை செயல்படுத்தக்கூடாது ன பொதுமக்கள் முற்றுகை போராட்டத்தரில் ஈடுபட்டனா். போராட்டத்தரில் ஈடுபட்டவா்களரிடம் பேரூராட்சரி தலைவா் ரேகா அய்யப்பன், பேரூராட்சரி செயல் அலுவலா் ஈஸ்வாரி, பட்டரிவீரன்பட்டரி இன்ஸ்பெக்டா் ஜோதரி முருகன் ஆகரியோா் பேச்சு வாா்த்தை நடத்தரினாா்கள். இதரில் சமாதானமடைந்த பொதுமக்கள் கலைந்து சென்றனா். இதுகுறரித்து செயல் அலுவலா் ஈஸ்வாரி கூறரியதாவது, அய்யம்பாளையம் தா்மசாஸ்தா கோவரில் ரோட்டரில் அரசு புறம்போக்கு இடத்தரில் பேரூராட்சரி குப்பை கரிடங்கு உள்ளது. இந்த இடத்தரில் தரிடக்கழரிவு மேலாண்மை சுத்தரிகாரிப்பு ஆலை அமைப்பதற்கான எந்தவரித ஆய்வு பணரிகளும் நடைபெறவரில்லை. இதுசம்பந்தமாக 2023ம் ஆண்டு இப்பகுதரியைச் சோ்ந்த பொதுமக்கள் ஆட்சேபனை தொரிவரித்ததால் இ்நத தரிட்டம் இங்கு செயல்படுத்துவதற்கான வழரிவகை இல்லை என்று பேரூராட்சரி சாா்பரில் சம்பந்தப்பட்ட அதரிகா ாரிகளரிடம் கடரிதம் வழங்கப்பட்டு வரிட்டது.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH

## புதுக்கோட்டை அருகே

# கல்லூரி மாணவன் தூக்கிட்டு தற்கொலை!

## உறவினர்கள் சாலை மறியல்; போக்குவரத்து பாதிப்பு!



புதுக்கோட்டை,நவ.21

புதுக்கோட்டை அருகே உள்ள தனியார் வேளாண்மை கல்லூ ரி விடுதியில் தங்கி முதலாம் ஆண்டு படித்து வந்த மாணவன் விடுதி அறையில் தூக்கிட்டு தற் கொலை செய்து கொண் டதால் அப்பகுதியில் சாலை மறியலால் போக்குவரத்து பரபரப்பு. மாணவன் உயிரிழப்புக்கு கல்லூரி நிர்வாகம் கொடுத்த மன உளைச்சல் தான் காரணம் என்று குற்றம் சாட்டியும் இதுவரை மூன்று மாணவர்கள் இதே போன்ற உயிரிழந்துள்ளதாகவும் இனி ஒரு உயிரிழப்பு ஏற்படாமல் தடுக்க கல்லூரியை மூட வ லியுறுத்தியும் உயிரிழந்த மாணவனுக்கு நீதி கிடைக்க வே ண்டும் என்று கூறி மாணவனின் பெற்றோர் மற்றும் உறவினர்கள்தனியார்கல்லூரி முன்பு புதுக்கோட்டை ஆலங்குடி புதுக்கோட்டை சாலையில் உள்ள தனியார் கல்லூரி முன்பு படுத்து உருண்டு கதறி அழுது மறியலில் ஈடுபட்டதால் பரபர ப்பு.

வேளாண்மை கல்லூரியில் படிக்க விருப்பமில்லாத மாண வன் கடந்த சில தினங்களாக கல்லூரிக்கு வராமல் இருந்த நிலையில் நேற்றைய முன் தினம் மாணவனின் தந்தை அவ ரை கல்லூரிக்கு கொண்டு சென்று விட்ட நிலையில் வகுப்புக்கு கூடவராத மாணவன் விடுதி அறையில் தூக்கிட்டு தற் கொலை செய்து கொண்டதாகவும் ஏற்கனவே இரண்டு முறை படிக்க விருப்பம் இல்லாத மாணவன் அவரது தந்தையை வரச்சொல்லி அவருடன் சென்று வந்ததாகவும் கல்லூரி நிர்வாகம் விளக்கம். கூறியது.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள வம்பனில் தனியார் வேளாண்மை கல்லூரி உள்ளது. இந்தக் கல்லூரி விடுதியில் தங்கி புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அரு கே உள்ள குலமங்களம் வடக்கு கிராமத்தைச் சேர்ந்த விஜ யசுந்தரம் என்பவரது மகன் மதன்குமார் (19) முதலாம் ஆண்டு படித்து வந்துள்ளார். இந்நிலையில் அவர் நேற்று முன்தினம் நள்ளிரவு கல்லூரி விடுதி அறையிலேயே உயிரிழந்துள்ளார். இதனை அடுத்து கல்லூரி நிர்வாகத்தினர் மாணவனின் பெற்றோருக்கு அ ழைத்து மாணவன் விடுதி அருகில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக தெரிவித்து விட்டு காவல் துறையை வைத்து மாணவனின் உடலை மீட்டு உடற்கூறு ஆய்வுக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக் கு அனுப்பி வைத்தனர்.

மேலும் போராட்டத்தில் ஈடுபட்டு வருபவர்களோடு மாவட்ட வருவாய் அலுவலர் ராஜராஜன்தலைமை யிலான ஆலங்குடி தாசில்தார் வில்லியம்மோசஸ் ஏடிஎஸ்பி முரளிதரன், மாவ ட்ட தனிப்பிரிவு காவல் ஆய்வாளர் ராமன்,ஆலங்குடி டிஎஸ்பி மனோகர் மற்றும் போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் வருவாய்த்து றையினரும்காவல்துறையினரும்பேச்சுவார்த்தை நடத்தி னர்கள்

இந்த பேச்சுவார்த்தையில் மாணவன் உடற்கூறு ஆய்வு செய்து அதில் வரும் முடிவில் கல்லூரி நிர் வாகத்தின் மீது தவறு இருந்தால் கல்லூரி மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று வாய்மொழி உத்தர வாதம் கொடு த்த,தை தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து கலைந்து மாண வனின் உடலை பெற புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூ ரி மருத்துவமனைக்கு சென்றனர்.

## கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட

# காங்கிரஸ் கட்சி சார்பில் இந்திரா காந்தி பிறந்த பிறந்தநாள் விழா!



கிருஷ்ணகிரி,நவ.21

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் முன்னாள் பாரத பிரதமர் அன்னை இந்திரா காந்தியின் பிறந்த நாளினை காங்கிரஸ் கட்சியினர் மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி உற்சாகமாகக் கொண்டாடப்பட்டது.

இதன் ஒரு பகுதியாக கிருஷ்ணகிரி அருகே உள்ள காட்டி நாயனப்பள்ளி கிராமத்தில் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் பாண்டுரங்கன் தலைமையில் அன்னை இந்திரா காந்தியின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

இந்த விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக கலந்துக் கொண்ட முன்னாள் மாவட்ட காங்கிரஸ் தலைவரும் காங்கிரஸ் கட்சியின் பொதுக்குழு உறுப்பினருமான எல் சுப்பிரமணியன், காங்கிரஸ் கட்சியின் மாவட்ட பொருலாளர் உமர், ஆகியோர் கலந்துக் கொண்டு அன்னை இந்திரா காந்தியின் திரு உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து புகழாஞ்சலி செலுத்தி உறுதி மொழியும் எடுத்து கொண்டதோடு கிராம மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது,

மேலும் இந்த விழாவின் போது தமிழக மக்களின் வாக்கு உரிமையை பறிக்கும் விதமாக இந்திய தேர்தல் அணையத்தின் மூலமாக கொண்டு வரப்பட்டுள்ள எஸ்.ஐ.ஆர். நடவடிக்கைக்கு எதிராக உறுதிமொழியும் எடுக்கப்பட்டது.

அப்போது காங்கிரஸ் கட்சியை சேர்ந்த கவுன்சிலர் ராதாகிருஷ்ணன், வட்டாரத் தலைவர் ஜாக்கப், நகரதலைவர் யுவராஜ், மற்றும் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த பன்னீர்செல்வம், கண்ணன், யாதவராஜ், அன்பரசன், மாணிக்கம் உள்ளிட்ட காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ஏராளமானவர்கள் கலந்துக் கொண்டனர்கள்.

## வாணியம்பாடி அருகே

# ஊராட்சி சார்பில் வைக்கப்பட்டிருந்த குடிநீர் தொட்டியை தனி நபர் அகற்றியதால் குடிநீர் சேவை பதிப்பு!

வாணியம்பாடி, நவ.21

திருப்பத்தூர் மாட்டம் வாணியம்பாடி அடுத்த செட்டியப்பனூர் ஊராட்சி துறையேரி கிராமத்தில் சுமார் 500 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். ஊராட்சி சார்பில் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகிக்கும் வகையில் அங்குள்ள ஒரு இடத்தில் சென்டெக் தண்ணீர் தொட்டி வைக்கப்பட்டது.

இந்த நிலையில் அந்த தண்ணீர் தொட்டி அமைந்துள்ள இடத்தையொட்டி பழனி என்பவரின் இடத்தை கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு ஆறுமுகம் என்பவர் வாங்கி உள்ளார்.

இந்த நிலையில் அந்த இடத்தை ஆறுமுகம் சுத்தம் செய்த போது பகுதி மக்களின் பயன்பாட்டில் இருந்த சின்டெக் தொட்டி ஊராட்சி நிர்வாகத்திடம் அனுமதி பெறாமல் அப்புறப்படுத்தியதாக கூறப்படுகிறது.

தகவல் அறிந்த பொதுமக்கள் அங்கே சென்று ஆறுமுகத்திடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். பின்னர் சம்பவம் குறித்து போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற கிராமிய போலீசார் தண்ணீர் தொட்டி அப்புறப்படுத்திய ஆறுமுகம் விசாரணை நடத்தினர். அப்போது இந்த தண்ணீர் தொட்டி ஊராட்சி நிர்வாகத்தின் அனுமதி பெற்று அகற்றியாதாக கூறிய ஆறுமுகம் பின்னர் காவல்துறையினரிம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

இதனை தொடர்ந்து காவல் துறையினர் இரு தரப்பினரிடம் பேச்சுவார்த்தை நடத்தி இது குறித்து விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியதால் பொது மக்கள் கலைந்து சென்றனர். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பான சூழல் காணப்பட்டது.

# கஞ்சா விற்ற 2 பேர் கைது!

சிவகாசி, நவ. 21

சிவகாசி அருகே செங்கமலநாச்சியார் புரம் பகுதியில் திருத்தங்கல் எஸ்ஐ பாண்டியராஜன் மற்றும் போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக கஞ்சாவுடன் வந்ததிருத்தங்கல் சரஸ்வதி நகரை சேர்ந்த மணிகண்டன் (எ) சீனிவாசன் (22), திருத்தங்கல் பாண்டியன் நகரை சேர்ந்த 17 வயது சிறுவனை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 120 கிராம் கஞ்சாவை போலீசார் பறிமுதல் செய்தனர். இந்த வழக்கு தொடர்பாக சோனமுத்துராஜை போலீசார் தேடி வருகின்றனர்.

# சென்னையில் 20வது பாதுகாப்புத் தலைமைத்துவ மாநாடு!

## இந்திய தனியார் பாதுகாப்புத் தொழிற்துறையின் எதிர்கால பாதையை வகுக்கிறது!!



சென்னை நவ.21

இந்தியாவின் மத்திய தனியார் பாதுகாப்புத் தொழில்துறை சங்கம் (CAPSI) நடத்தும் 20வது பாதுகாப்புத் தலைமைத்துவ மாநாடு சென்னை நடைபெறுகிறது. “இந்தியப் பாதுகாப்புத் தொழிற்துறை 2.0 – காவலர்களிலிருந்து காப்பாளர்களாக” என்ற கருப்பொருளில் நடைபெறும் இந்த மாநாட்டை CAPSI & APDI தலைவர் குன்வர் விக்ரம் சிங் வழிநடத்துகிறார். இதில் மாண்புமிகு சி. வி. கணேசன், டாக்டர் டி. ஆர். பி. ராஜா, டி. எம். அன்பரசன், எம். சந்திரசேகர் (ADGP), பீட்டர் கோல்மன், லெ.ஜெ. ஏ. பி. சிவானே (ஓய்வு), லெ.ஜெ. ஷோகின் சௌஹான் (ஓய்வு), மே.ஜெ. பினோஜ் பஸ்யாட் (ஓய்வு), டோமின் ஜே. தாச்சங்கேரி (ஓய்வு), டாக்டர் கேசவ் குமார் (ஓய்வு), பகவான் சங்கர் (ஓய்வு), அனில் பிரதம் (ஓய்வு), கர்னல் நதீம் அர்ஷத், மற்றும் சிவராமகிருஷ்ணன் வி உள்ளிட்ட பல முக்கிய நிபுணர்கள் பங்கேற்கின்றனர். மாநாட்டின் முக்கிய நிகழ்வுகளில் கர்னல் (டாக்டர்) இந்தர்ஜீத் சிங் பரா நினைவு இணையப் பாதுகாப்பு விருது வழங்கல், CAPSI கனெக்ட் ஆப் அறிமுகம், டிஜி சுரக்ஷா உடன் MOU கையெழுத்து, CAPSIயில் 20/15/10 ஆண்டுகள் பணியாற்றிய உறுப்பினர்களுக்கு பாராட்டு, மற்றும் இணையப் பாதுகாப்பு, தீ & உயிர் பாதுகாப்பு, பாதுகாப்பு புதுமைகள், பேரிடர் மேலாண்மை போன்ற துறைகளில் சிறப்பு அமர்வுa கள் இடம்பெறுகின்றன.

## SLAT 2026 விண்ணப்பங்கள்:

# சிம்பயோசிஸ் சட்டப் பள்ளிகளில் சேர இப்போதே விண்ணப்பியுங்கள்!




சென்னை நவ.21

SLAT 2026க்கான விண்ணப்பங்கள் நவம்பர் 30, 2025 அன்று முடிவடைகின்றன. Symbiosis International (Deemed University) நடத்தும் இந்த கணினி அடிப்படையிலான தேர்வு (CBT), புனே, நொய்டா, ஹைதராபாத், நாக்பூர் ஆகியவற்றின் Symbiosis Law School–களில் வழங்கப்படும் B.A. LL.B. (Hons.), B.B.A. LL.B. (Hons.), B.A. LL.B., B.B.A. LL.B., மற்றும் SLS புனேவின் புதிய B.Com LL.B. (Hons.) போன்ற ஒருங்கிணைந்த சட்டப் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வாகும். தேர்வு இரண்டு முறை எழுத அனுமதிக்கப்பட்டு, சிறந்த மதிப்பெண் மட்டும் கருதப்படும். பதிவு செய்ய https://www.slattest.org/ என்ற போர்ட்டலில் தனிப்பட்ட மற்றும் கல்வி விவரங்களைப் பதிவுசெய்து OTP மூலம் உறுதிப்படுத்தி கட்டணம் செலுத்த வேண்டும். SLAT பதிவு கட்டணம் மட்டும் படிப்பு தகுதியை வழங்காது என்பதால், தேர்ந்தெடுத்த படிப்புகளுக்கான கூடுதல் கட்டணமும் கட்டாயம். SLS Pune, SLS Noida, SLS Hyderabad, SLS Nagpur ஆகிய அனைத்தும் தத்தம்தத்தம் வலிமைகளுடன் உயர்தர சட்டக் கல்வியை வழங்கும் முன்னணி சட்டப் பள்ளிகளாகும்.

## மல்லப்பாடி கிராமத்தில்

# 10 ஆண்டுகளாக குப்பை கழிவுகளை ஆற்றில் கொட்டும் அவலம்!

## நடவடிக்கை எடுக்க சமூக ஆர்வலர்கள் கோரிக்கை!!



கிருஷ்ணகிரி நவ.21

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அருகே மல்லப்பாடி கிராமத்தில் உள்ள மந்தை வீதி தெரு ஆற்றில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேல் மல்லப்பாடி கிராமத்தில் சேகரிக்கும் குப்பைகளை ஊராட்சி துப்புரவு பணியாளர்கள்மற்றும்தூய்மைகாவலர்கள்குப்பைகளை கொட்ட ஒதுக்கப்பட்ட நாடார் கொட்டாய் சுப்பன் தோப்பு அருகே உள்ள அரசு புறம்போக்கு இடத்தில் கொட்டி மக்கும் குப்பை மக்கா குப்பை என தரம் பிரித்து அகற்றுவதை தவித்து தினமும் மல்லப்பாடி ஆற்றில் கொட்டி தண்ணீரை மாசுபடுத்துகின்றனர்இந்த நீரை பயன்படுத்தும் பொது மக்கள் கால்நடைகளுக்கும் பல்வேறு தொற்று நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது மேலும் அந்த குப்பைகளுக்கு தீ வைத்து கொழுத்தி விடுகின்றனர் இதனால் அருகில் உள்ள அங்கன்வாடி மற்றும் அரசு துவக்கப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் மற்றும் அங்கு குடியிருக்கும் 100 மேற்பட்ட குடும்பங்களில் வசிக்கும் முதியோர்கள் மற்றும் குழந்தைகளுக்கு அடிக்கடி சுவாசகோளாறுகள் ஏற்பட்டு தினமும் சிரமப்படுகின்றனர் .ஆற்றில் குப்பைகளை கொட்டுவதைதடுப்பதற்கானநடவடிக்கைஎடுக்குமாறு ஊர் பொது மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் சார்பாக கேட்டுக்கொள்கின்றோம்.



தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையம் தலைவர் அருள் தந்தை அருண் மற்றும் எழும்பி பிரகாஷின் ஜெயசிங் ஆகியோர் நல்லாசியுடன் ஏழை மக்களுக்கு இல்லம் தேடி உணவு வழங்கும் விழாவை கிருஷ்ணகிரி கலெக்டர் தினேஷ்குமார் கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

# ஆலமரத்துகுப்பம் அருகே குண்டும் குழியுமான சாலைகள்!

## சரிசெய்ய பொதுமக்கள் கோரிக்கை!!



விழுப்புரம் நவ.21

தவளகுப்பம் (டு) மடுகரை மெயின் ரோடு விழுப்புரம் மெயின் சாலை வழியாக விழுப்புரம் மாவட்டம் கொண்டூர் ஆலமரத்துகுப்பம் மற்றும் அருகில் இருக்கும் கடலூர் மாவட்டம் நல்லாத்தூர் அங்கும் இதே நிலைதான் தார் சாலை பள்ளம் தனியார் பேருந்துகள் 42 தனியார் பேருந்துகள் புதுவை மாநிலத்துக்கு சென்று வருகின்றன

இதன் வழியாக செல்லுகின்றன மற்றும் காலேஜ் பஸ் (ஐ எப் டி, ) மயிலம் பொறியியல் கல்லூரி, மணக்குள விநாயகர் காலேஜ், பஸ் அனைத்து கனர வாகனங்கள் இந்த வழியாக செல்லுகின்றன மழை பெய்து வருகிறது போதெல்லாம் மக்கள் இருசக்கர வாகனத்தில் செல்லும் பொழுது அச்சமடைந்து

உயிர் பலி ஏற்படும் நிலையில் உள்ளது ஏற்கனவே இரு சக்கர வாகனத்தில் சென்றவர்கள் இதன் பள்ளத்தில் விழுந்து எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கிறது

அடிபட்டவர் 20 பேருக்கு மேல் அடிபட்டு இருப்பார்கள் கணக்கிட முடியாது தார் சாலையில் தண்ணீர் தேங்குவதை முற்றிலுமாக நெடுஞ்சாலைத்துறை அகற்ற வேண்டும் அதற்கு நிரந்தரவு தீர்வு காணும்என்றுஎன்றால்இருபுறங்களிலும் மழைநீர் வடிகால் வாரியம் சைடு வாய்க்கால் அமைத்து தர வேண்டும்

அப்பொழுதுதான் இந்த சாலை பள்ளம் ஆகாமல் இருக்கும் அப்போது மக்கள் கோரிக்கையாக உள்ளது இதன் நெடுஞ்சாலைத்துறைஅதிகாரிகள்கண்டு கொள்வதால் இல்லை அப்படியே விட்டு வருவார்ளா ?

சமூக ஆர்வலர் மற்றும் பொதுமக்கள் மற்றும் இருசக்கரவாகனத்தில் அனைத்து பொதுமக்கள் கூறி சென்று இருக்கிறார்கள் என்று கேள்விக்குறியாக உள்ளது.

## 18 அம்ச கோரிக்கையை நிறைவேற்றக்கோரி

# நில அளவை அலுவலர்கள் சங்கத்தினர் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம்!



திருப்பத்தூர் நவ.21

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு நிலஅளவை அலுவலர்கள் சங்கம் சார்பில் 18 அம்ச கோரிக்கையை நிறைவேற்ற கோரி திருப்பத்தூர் மாவட்ட துணைத்தலைவர் TNSOU பூபதி தலைமையில் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் நடைபெற்றது.

மேலும் நில அளவர்களாக ஒருமுறை தரம் இறக்கப்பட்ட குறுவட்ட அளவர் பதவியை மேல் தரம் உயர்த்தி வழங்க வேண்டும், துணையாய்வாளர் ஆய்வாளர்கள் ஊதிய முரண்பாட்டை களைத்திட வேண்டும்,

புதியதாக அறிவித்துள்ள நகராட்சிக்கு நகரசார் ஆய்வாளர் பணியிடங்களை நிரப்ப வேண்டும், ஒப்பந்த முறையில் உரிமம்பெற்றஅளவர்களைநியமிப்பதை முற்றிலும் கைவிட்டு காலம் முறை ஊதியத்தில் பணி அமைத்திட வேண்டும் என 18 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் நடத்தினர்.

மேலும் இதில் திருப்பத்தூர் மாவட்ட நில அளவை அலுவலர் சங்கம் சார்பில் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

டன் இந்த போராட்டத்தின்போது திருப்பத்தூர் கோட்டத் தலைவர் பனிமலர், மாவட்ட இணை செயலாளர் அசோக் குமார், மாவட்ட பொருளாளர் வினோத் குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## திருப்பத்தூர் மாவட்டத்தில்

# நிலத்தகராறில் செடிகளை வெட்டி வீசிய உறவினர்!

## எஸ்.பி. அலுவலகத்தில் புகார்!!

திருப்பத்தூர் நவ.21

திருப்பத்தூர் மாவட்டம் பெரியமூக்கனூர் பகுதியை சேர்ந்த ராமமூர்த்தி மகன் தினகரன் (51) இவர் கடந்த 2015 ஆம் ஆண்டு அதே பகுதியை சேர்ந்த அண்ணாதுரை என்பவரிடம் 51 சென்ட் அளவிலான நிலத்தை வாங்கியுள்ளார்.

இந்த நிலையில் அண்ணாதுரையின் மச்சான் ஆன உதயகுமார் (35) என்பவருக்கும் இடையே நில தகராறு இருந்து வந்துள்ளது.

மேலும் உதயகுமார் தன்னுடைய அம்மாவிற்கு சேர வேண்டிய சொத்து எனக் கூறிய நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து உள்ளார்.

அதேபோல முறையான பத்திரம் பதிவு செய்துள்ளதால் தினகரனும் நீதிமன்றத்தில் இதுகுறித்து வழக்கு தொடர்ந்து உள்ளார் இந்த நில பிரச்சினை நீதிமன்றத்தில் உள்ள நிலையில்

நேற்று இரவு உதயகுமார் அத்துமீறி தினகரன் நிலத்தில் பயிரிடப்பட்டிருந்த வாழைமரம், கொய்யா செடி, எலுமிச்சை செடி, உள்ளிட்ட 40க்கும் மேற்பட்ட செடிகளை வெட்டி வீசி சென்று உள்ளார்.

இதனை அறிந்த தினகரனின் தாயாரான ருக்மணி காலங்காலமாக பல ஆயிரம் ரூபாய் செலவு செய்து தண்ணீர் ஊற்றி புள்ளை போல வளர்த்த செடிகளை வெட்டிட்டானே?

அவ நல்லா இருப்பானா? என கதறி அழுத்த சம்பவம் காண்போர் நெஞ்சை கண்கலங்க செய்தது.

மேலும் இதுகுறித்து திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் செடிகளை வெட்டிய உதயகுமார் மீது தினகரன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என புகார் அளித்தார்.

### மேட்டூர் அருகே

# பெற்ற மகளுக்கு பாலியல் தொந்தரவு!

## தந்தை மீது போக்சோ வழக்கு!!

மேட்டூர்,நவ.21

சேலம் மாவட்டம் மேட்டூர் அருகே மேச்சேரி பகுதியை சேர்ந்த 39 வயது கூலி தொழிலாளி. இவருக்கு திருமணம் ஆகி 13 வயதில் ஒரு மகள் உள்ளார். சிறுமி அங்குள்ள அரசு பள்ளியில் எட்டாம் வகுப்பு படித்து வந்தார். கடந்த சில நாட்களாக சிறுமி பள்ளிக்கு வராததால் பள்ளி நிர்வாகம் மாவட்ட நிர்வாகத்திற்கு தகவல் கொடுத்ததின் பேரில் சேலத்தில் இருந்து ஹெல்ப் லைன் மூலம் மாணவியின் வீட்டிற்கு சென்று பள்ளிக்கு வராத காரணத்தை அதிகாரிகள் கேட்டுள்ளனர். அப்போது சிறுமி தனது பெற்றோர் குடும்ப பிரச்சினை காரணமாக பிரிந்து வாழ்ந்து வருவதாகவும் குடும்ப சூழ்நிலை காரணமாக பள்ளிக்கு வரமுடியவில்லை என்று கூறியுள்ளார். மேலும் தனியாக வீட்டில் இருந்த போது தன்னிடம் தனது தந்தை பலமுறை தவறாக நடந்து கொண்டதாக தெரிவித்துள்ளார் .

இது பற்றி ஹெல்ப் லைன் அதிகாரிகள் மேட்டூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்துள்ளனர் இதன் பேரில் மாணவியின் தாயார் இன்று மேட்டூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.சிறுமியிடம் போலீசார் விசாரித்த போது கடந்த சில மாதங்களுக்கு முன்பு வீட்டில் தனியாக இருந்த போது தந்தை பலமுறை பாலியல் தொந்தரவு செய்ததாக கூறியுள்ளார். இதனையடுத்து அந்த சிறுமியின் தந்தையான 39 வயது கூலித் தொழிலாளி மீது மேட்டூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் போலீசார் போக்சோ வழக்கு பதிவு செய்தனர். இதனிடையே மாமனாரை அடித்து கொலை செய்த வழக்கில் கடந்த 20 நாட்களுக்கு முன்பு அந்த சிறுமியின் தந்தையை தீவட்டிப்பட்டி போலீசார் கைது செய்து சேலம் மத்திய சிறையில் அடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.



### மேட்டுப்பாளையம் நகரவை பள்ளியில்

# பிளஸ் டூ மாணவிகளுக்கு வினாவிடை புத்தகம்!

## ஆ.ராசா எம்.பி. வழங்கினார்!!

மேட்டுப்பாளையம்,நவ.21–

நீலகிரி தொகுதி எம்பியும், திமுக துணை பொது செயலாளருமான ஆ.ராசா மேட்டுப்பாளையம் நகரவை பெண்கள் மேல்நிலை பள்ளியில் 200க்கும் மேற்பட்ட பிளஸ் டூ மாணவிகளுக்கு வினாவிடை புத்தகங்களை வழங்கினார்.

தொடர்ந்து பள்ளியில் 15 வது மாநில நிதிக்குழு மாநில நிதி ரூ.61 லட்சம் மதிப்பில் கூடுதலாக இரு வகுப்பறைகள் மற்றும் ஆய்வுக்கூடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

இப்பணிகளையும் அவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டதோடு பணிகளை விரைவாகவும்,தரமாகவும் செய்து முடிக்க வலியுறுத்தினார்.

அப்போது, மாணவிகளிடையே பேசிய நீலகிரி எம்பி ஆ.ராசா மாணவிகளுக்கு வழங்கப்படும் புதுமைப்பெண் திட்டத்தில் மாதந்தோறும் உதவித் தொகைரூ.1000,பெற்றோரை இழந்த உறவினர் இல்லங்களில் வசிக்கும் மாணவர்களுக்கு

அன்புக்கரங்கள் என்ற திட்டத்தின் கீழ் மாதந்தோறும் உதவித்தொகை ரூ.2000 உதவி தொகை என கல்விக்காக பல் வேறு வகையில் உழைத்து வருகிறது தமிழக அரசு என பேசினார்.

அப்போது,திமுக கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி,திமுக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் அஷ்ரப் அலி,டி.ஆர். சண்முகசுந்தரம்,நகர் மன்ற தலைவர் மெஹரிபா பர்வீன், கமிஷனர் அமுதா, பள்ளியின் தலைமை ஆசிரியை சீதாலட்சுமி உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.

### குந்தாரப்பள்ளியில் கூட்டுறவு வார விழா:

# 1,088 பயனாளிகளுக்கு ரூ.10.37 கோடி கடனுதவி!

## அமைச்சர் சக்கரபாணி வழங்கினார்!!

கிருஷ்ணகிரி, நவ.21



கிருஷ்ணகிரி மாவட் டம் குந்தாரப்பள்ளியில் அனைத்திந்திய கூட்டுறவு வாரவிழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கலெக்டர் தினேஷ்குமார்தலைமை வகித்தார். எம்எல்ஏக்கள் ஓசூர் பிரகாஷ், பர்கூர் மதியழகன், தளி ராமச்சந்திரன், ஓசூர்மாநகராட்சி மேயர்சத்யா ஆகியோர் முன்னிலை வகித்தனர். தர்மபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இணைப்ப திவாளரும், மேலாண்மை இயக்குநருமான மலர்விழி பேசினார். கூட்டுறவு சங் கங்களின் இணைப்பதிவா ளர் நடராஜன் வரவேற் றார். விழாவினை தமிழக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி துவக்கி வைத்தார். 1088 பயனாளிகளுக்கு ரூ.10.37 கோடி கடனுதவி வழங்கி விழாவில் அமைச்சர் சக்கரபாணி பேசும்போது:–

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 120 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங் கள், 58 இதர கூட்டுறவு கடன் சங்கங்கள் என மொத்தம் 178 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் வேளாண் மேம்பாடு, மகளிர் மேம் பாடு, சிறுபான்மை யினர் மேம்பாடு, பிற்படுத்தப்பட்டோர் மேம்பாடு மற்றும் சமூகத்தில் நலிவுற்ற மக்களின் மேம்பாட்டிற்கு சிறந்த சேவையாற்றி வருகின்றன. இம்மாவட்டத்தில் உள்ள 123 சங்கங்கள் மூலம் 60,214 நபர்களுக்கு ரூ.233.69 கோடி மதிப்பில் பயிர்கடனும், 120 சங்கங்கள் மூலம் 28,414 நபர்களுக்கு ரூ.230.79 கோடி மதிப்பில் பயிர் கடன் மற்றும் விவசாய நகைக்கடனும், தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றார்.

நிகழ்ச்சியில், துணை மேயர் ஆனந்தய்யா, முன் னாள் எம்எல்ஏ முருகன், மாவட்ட தொழில் மைய பொதுமேலாளர் பிரசன்ன பாலமுருகன், கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதி வாளர்கள் பாலமுருகன், கோபி, குமரன், மீன்வளத் துறை உதவி இயக்குநர் ரத்தி னம், பிஆர்ஓ மோகன், நகர் மன்ற துணைத்தலைவர் சாவித்திரி கடலரசுமூர்த்தி, கூட்டுறவு சார்பதிவாளர் கள், சரக பதிவாளர் கள், துறை சார்ந்த அலுவலர் கள், மகளிர் சுய உதவிக்கு ழுவினர், கூட்டுறவு சங்க செயலாளர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், விவசாயிகள், பொது மக்கள்கலந்து கொண்டனர்.



சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற உடன்பிறப்பே வா நிகழ்ச்சியில் ஆனைமலை பேரூர் கழகச் செயலாளர் டாக்டர் செந்தில்குமார் கலந்து கொண்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் புத்தகம் வழங்கினார்.

# ரியல் எஸ்டேட் அதிபர் தூக்கிட்டு தற்கொலை!

கோபி, நவ. 21–

கோபி அருகே நாகதேவன்பாளையத்தை சேர்ந்தவர் சரவணன், 49. இவர் அரிசி வியா பாரம், ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தார். அவருக்கு திலகமணி, 44, என்ற மனைவி, இரு மகன்களும் உள்ளனர். கடந்த இரு ஆண்டுகலாக மனநலம் பாதித்ததால், தொழிலை சரியாக செய்ய முடியாமல் சரவணனுக்கு நஷ்டம் ஏற் பட்டது. இதனால் மனவேதனையில் இருந்த அவர், நேற்று மாட்டு தொழுவத்தில் தூக்கிட்டு கொண்டார். சிகிச்சைக்காக கோபில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் இறந்தார். இதுகுறித்து அவ ரது மனைவி திலகமணி கொடுத்த புகார் படி, சிறுவலுார் போலீசார் விசாரிக்கின்றனர்.



### காங்கேயம் அருகே

# வெறிநாய்கள் கடித்து 16 ஆடுகள் பலி!

காங்கேயம் நவ .21

காங்கேயம் ஊதியூர் அருகே வட்டமலைபாளையம் திருமாயி தோட்டத்தில் விவசாயம் செய்து கொண்டு கால்நடைகளை வளர்த்து வருபவர் சிவசுப்பிரமணியம் (45). வழக்கம் போல் நேற்று இரவு 90 ஆடுகளை தனது தொண்டு பட்டியில் அடைத்து வைத்துள்ளார். இன்று காலை சென்று பார்க்கையில் வெறி நாய்கள் கடித்து 16 ஆடுகள் இறந்த நிலையிலும் 8 ஆடுகள் கவலைக்கிடமாக கிடந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார். இது குறித்து அப்பகுதி பொதுமக்கள்கூறுகையில் இறந்த ஆடுகளின் மதிப்பீடு ரூ.2.5 லட்சம் ஆகும்.

தமிழக அரசு இழப்பீடு வழங்க வேண்டும் இப்பகுதியில் திரியும் வெறி நாய்களை அப்புறப்படுத்த வேண்டும் எனவும் இல்லையெனில் பொதுமக்கள் ஒன்று திரண்டு போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றனர்.



நீலகிரி மாவட்டம் உதகை நகராட்சிகுட்பட்ட மார்கெட் பகுதியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.20 கோடி மதிப்பில் பகுதி 1–யில் கட்டப்பட்டு வரும் கடைகளின் கட்டுமான பணிகளை, நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர்ஆ.ராசா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் உதகை நகராட்சி ஆணையாளர் கணேசன், உதகை நகர்மன்ற தலைவர் வாணீஸ்வரி, உதகை நகர்மன்ற துணை தலைவர்ரவிக்குமார், திட்டக்குழு உறுப்பினர் ஜார்ஜ் உட்பட பலர் உள்ளனர்.



ராசிபுரத்தில் ஸ்ரீ நித்திய சுமங்கலி அம்மனுக்கு ஐப்பசி மாத பண்டிகையையொட்டி அலங்காரம் செய்யப்பட்டு வழிபாடு நடந்தது.

# வால்பாறை அருகே பள்ளி மாணவி தீக்குளித்து தற்கொலை!

வால்பாறை,நவ.21–



கோவை மாவட்டம், வால்பாறை அடுத்துள்ள ரொட்டிக்கடை அரசு மேல்நிலைப்பள்ளியில் சஞ்சனா என்ற மாணவி 9–ம் வகுப்பு படித்து வந்தார். இந்த நிலையில் கடந்த 10–ந் தேதி வழக்கம்போல் பள்ளிக்கு சென்று சஞ்சனா வீட்டிற்கு வந்தார்.அவர் வீட்டிலிருந்த மண்ணெண்ணெயை எடுத்து உடலில் ஊற்றிக்கொண்டு தீ வைத்து கொண்டார்.

இவரது அலறல் சத்தத்தை கேட்டு அக்கம்பத்தினர் ஓடி வந்து தீயை அணைத்து சஞ்சனாவை மீட்டு வால்பாறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு முதலுதவி சிகிச்சை அளித்த பின்னர், மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.இந்த நிலையில் நேற்று சிகிச்சை பலனின்றி சஞ்சனா உயிரிழந்தார். இதுகுறித்து வால்பாறை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். விசாரணையில் 2 நாள் விடுப்பு பிறகு பள்ளிக்கு சென்ற சஞ்சனாவை ஆசிரியர் திட்டியதாககூறப்படுகிறது.

இதனால் மனமுடைந்த சஞ்சனா தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டதாக போலீசார் தெரிவித்தனர்.

### எடப்பாடியில்

# இந்திராகாந்தி பிறந்தநாள் விழா!

## கே.வி.தங்கபாலு பங்கேற்பு!!



எடப்பாடி நவ 21

சேலம் மேற்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் சார்பில் எடப்பாடியில் நடைப்பெற்ற இந்திராகாந்தி பிறந்த நாள் விழா கூட்டத்தில் கே.வி. தங்கபாலு முன்னிலையில் மாற்றுக்கட்சியினர் காங்கிரஸில் இணைந்தனர். முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி பிறந்த நாள் விழா சேலம் மேற்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் சார்பில்மேற்கு மாவட்ட செயலாளர் ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் முன்னணி தலைவர்கள் விஜய்பாபு, வைத்தியநாதன் சக்திவேல் உள்ளிட்ட பல்வேறு இயக்கங்களில் இருந்து 300க்கும் மேற்பட்டோர்அக்கட்சிகளில் இருந்து விலகி முன்னாள் மத்திய அமைச்சர் கே.வி.தங்கபாலு முன்னிலையில் காங்கிரஸ் கட்சியில் இணைத்துக் கொண்டனர்.

நிகழ்ச்சயின் பின்னர் கே.வி.தங்கபாலு செய்தியாளர்களிடம் கூறும்போது:–

இந்தியாவில் காங்கிரஸ் கட்சி தான் பிஜேபி கட்சிக்கு எதிர்க்கட்சி என்றும் ராகுல் காந்தி தலைமையில் இந்தியா கூட்டணி சிறப்பாக செயல்படுகிறது இந்தியா கூட்டணி இந்திய மக்களின் நம்பிக்கையை கடந்த பீகார் தேர்தலில் 65 லட்சம் வாக்குகளை நீக்கியும் ஒன்றரை கோடி பேருக்கு மேல் பத்தாயிரம் ரூபாய் பணம் கொடுத்தும் பா.ஜ.க. அணியினர் வெற்றியை பெற்றுள்ளனர் அரசாங்கமே வாக்குக்கு பணம் கொடுத்தது இதுதான் முதல் முறை இந்த ஜனநாயக படுகொலையை மக்கள் விரைவில் உணர்வார்கள் .காங்கிரஸ் கட்சி கடந்த 20 ஆண்டுகளாக திமுக கூட்டணியில் உள்ளது தமிழகத்தில் இந்தியா கூட்டணி தலைவர் மு.க .ஸ்டாலின் அங்கம் பெற்றுள்ளார். இந்தியா கூட்டணிஎடுக்கும்அனைத்துமுயற்சிகளிலும் இணைத்துக் கொள்கிறார் பிஜேபியை தமிழ்நாட்டில் விமர்சிக்கும் தலைவராக உள்ளார் எங்கள் கூட்டணி வலுவான கூட்டணி பஞ்சாயத்து முதல் பாராளுமன்றம் வரை தொடர் வெற்றிகளை பெற்று வருகிறோம் என்றார்.

இக்கூட்டத்தில் மூத்த காங்கிரஸ் நிர்வாகி கோபால் எடப்பாடி நகர தலைவர் நாகராஜ் உள்ளிட்ட காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் பலரும் உடன் இருந்தனர்.

### ராசிபுரம் அருகே

# கற்களை வெட்டி கடத்தல்!

## 2 டிராக்டர்கள், வாகனம் பறிமுதல்!!

ராசிபுரம்,நவ.21

ராசிபுரம் அடுத்துள்ள சானார் புதுர்பகுதியை சேர்ந்தவர் வரதராஜன் மகன் மாயகண்ணன், 45 இவரது தோட்டத்தில் வெடிவைத்து பாறைகற்களை வெட்டி எடுத்து விற்பனை செய்வதாக நாமக்கல் கனிமவளத்துறை அதிகாரிகளுக்கு



ரகசிய தகவல் கிடைத்தது. இதன் அடிப்படையில் கனிமவளத்துறை அதிகாரிகள் நேரில் சென்று பார்த்தபோது கற்களை வெட்டிச்சென்றது தெரியவந்தது. இது குறித்து கனிமவளத்துறை அதிகாரிகள் ராசிபுரம் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். விரைந்து வந்த போலீசார் அங்கிருந்த, 2 டிராக்டருடன் சேர்ந்த கம்பர்சர், ஹிட்டாச்சி வண்டி ஆகியவற்றை பறிமுதல் செய்தனர். மேலும் கனிமவளத்துறை அதிகாரிகள் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன் அவர்கள் முன்னிலையில் வழங்கினார். உடன் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ராஜசேகர், துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி.கதிர் செல்வி உட்பட பலர் உள்ளனர்.